தெய்வத்தான வெளியீடு-1.

உ

திருமுருகன் துணை

ஸ்ரீ கந்தசாமி தெய்வத்தானம்
திருப்போரூர்.

# திருப்போரூர் தலவரலாறு



ஸ்ரீலஸ்ரீ சிதம்பர சிவஞான சுவாமிகள்

ஆதின பரம்பரை தர்மகர்த்தர், திருப்போரூர்.

உ

திருமுருகன் துணை

## ஸ்ரீ கந்தசாமி தெய்வத்தானம்

திருப்போரூர்

# திருப்போரூர் தலவரலாறு

### காப்பு

மருப்பு நிலவால் என்மலதிமிரம் போக்கும்
கருக் கோடை போக்கும் மதக்காரால்—திருப்போரூர்
நிம்பத்தின் கீழிருந்து நேயர்க்கு வாழ்வளிக்கும்
கம்பக் கட்மா களிறு.

### முருகன் துதி

பூ வார்ந்த கற்பகப்பூம் பொங்கரிடத் திற்சிறந்த
தேவாய்ந்த செல்வமுதற் செல்வமெல்லாம்—தூவாய்ந்த
வேள் பணிந்த பேரழகா மேதகுபோ ரூரா நின்
தாள் பணிந்தார்க் குண்டாகுந் தான்

---

முன்னுரை :

வேரூன்றித் தழைத்து ஓங்கி நிற்கின்ற இந்து சமய தெய்வத்தருவின் தண்ணிழலின்கீழ் செழித்துப் பரவி நிலவும் இப்புண்ணிய பூமியில், மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றினுலும் சிறப்புடைய தெய்வ நலஞ்சான்ற நல்லிடங்கள் பல விளங்கித் திகழ் கின்றன. அவற்றுள் தெய்வமணங்கமழும் தமிழ்த்திரு நாட்டில் சான்ரோர் மலிந்த தொண்டை மண்டிலத்தில் உள்ள திருப்போரூர் என்ற பதியும் ஒன்ருகும். இவண் கலியுக வரதனுகிய கந்தப் பெருமான் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளார்.

**திருப்போரூர் இருப்பிடம் :**

இப்பதி சமாரபுரி, யுத்தபுரி, என்ற பெயர்களாலும் அழைக்கப்படுகிறது. இது தமிழ் மா நிலத்தில் செங்கை மாவட்டத்தில் உள்ளது. சென்னை—மகாபலிபுரம் பாதையில் உள்ளது. சென்னையிலிருந்து தெற்கே 25 கல் தொலைவில் உள்ளது. செங்கற்பட்டு இரயில் நிலையத்திலிருந்து தென் கிழக்கில் 16 கல் தொலைவில் பஸ் மார்க்கத்தில் உள்ளது. சென்னையிலிருந்து ஒரு மணி நேரத்திற்கு ஒருமுறை அரசாங்கபஸ் இவ்வூர் வழியாக மகாபலிபுரம் செல்கிறது. தெற்கிலிருந்து வருகிறவர்கள் செங்கற்பட்டு இரயில் நிலையத்தில் இறங்கி அங்கிருந்து மணிக்கு ஒருமுறை தனியார் துறையில் இயங்கும் பஸ்ஸில் இவ்வூர் வந்தடையலாம். இப்பதி கீழைக்கடலுக்கு அண்மையில் உள்ளது. கிழக்கு மேற்கில் அரைக்கல் அளவும் தெற்கு வடக்கில் முக்கால் கல் அளவும் கொண்ட பரப்பில் அமைந்துள்ளது. இங்கு ஒரு தபால் நிலையம் உள்ளது. தந்தி வசதி இல்லை. தந்தி வசதி மகாபலிபுரத்தில்தான் உண்டு. மகாபலிபுரத்துக்கும் இவ்வூருக்கும் இடையே 10 கல் தொலைவு இருக்கிறது. இங்கு ஊர்க்காவல் நிலையம் ஒன்றிருக்கிறது. திருப்போரூர் ஒரு பிளாக் மையம். பிளாக் அபிவிருத்தி அலுவலகம் ஒன்று இங்கு இருக்கிறது. அரசினர் பயண விடுதி ஒன்றும் உள்ளது. ஒரே சமயத்தில் இருவர் தங்க வசதி இவ்விடுதியில் உண்டு. இங்கிருந்து காஞ்சி, திருக்கழுக்குன்றம், மயிலாப்பூர், திருவான்மியூர், திருஇடைஎந்தை, ஸ்ரீபெருமந்தூர் முதலிய தலங்கட்கும் பஸ் மூலமாகச் செல்லலாம். இவ்வூர் இங்கு கோயில் கொண்டருளிய கந்தப்பெருமானுக்கு அர்ப்பணித்த கிராமமாகும்.

**கோயில் :**

ஸ்ரீகந்தசாமியார் தெய்வத்தானம் ஊரின் நடுவில் அமைந்துள்ளது. ஒவ்வொன்றும் 300 கெஜ நீளமுள்ள

வெளிப்புற மாடவீதிகள் நான்கும், 200 கெஜ நீள முள்ள உட்புற மாடவீதிகள் நான்கும் கொண்ட அமைப்பினுள் இத்திருக்கோயில் அமைந்துள்ளது; 20 அடி உயரமுள்ள நாற்புறமதிற் சுவரால் சூழப் பட்டது. கோயில் கீழ்த்திசை நோக்கிய சந்நிதி. கோயிலின் முகப்பில் 15 கெஜ சதுரத்தில் ஓர் அழகிய மண்டபம் உள்ளது. மண்டபத்தின் உயரம் சற்று ஏறக்குறைய 25 அடி இருக்கும். 20 அடி உயரமுள்ள 16 கற்றூண்கள் இம்மண்டபத்தைச் சுமந்து நிற் கின்றன. இதைக் கடந்து சென்றால் முகப்பு வாயிலை அடையலாம். முகப்பு வாயிலைக் கடந்து உட்சென்றால் அழகிய தாமரை வடிவில் ஒரு வட்டமான மண்டபத் தைக் காணலாம்; வட்ட வளைய அமைப்பில் கட்டப்பட் டிருக்கிறது. வெளிவட்டத்தில் 20 இரும்புத் தூண்களும் உள்வட்டத்தில் 10 இரும்புத்தூண்களும் இம் மண்டபத்தைத் தாங்கி நிற்கின்றன. உள்வட்ட வெளியில் மாயூரச் சிற்றாலயமும் துவஜபீடமும் பலி பீடமும் ஒன்றன்பின் ஒன்றாக அமைந்துள்ளன. இம் மண்டபத்தைக் கடந்து சென்றால் காட்சியளிப்பது இராஜகோபுரம்; பழைய சிற்ப வேலைப்பாட்டுடன் ஏழு நிலைகளையுடையது. கோபுரத்தைக் கடந்து உட் சென்றால் மகாமண்டபத்தையடையலாம். மகாமண் டபத்தை யடைந்ததும் தென்திசை நோக்கிக் குனித்த புருவத்துடன் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும், பனித்த சடையில் பால் வெண்ணீறும் இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் கொண்டு சிவகாமி சமேதராய்க் காட்சியளிக்கும் ஆடல் பெருமான் அருள் நோக்கு நமக்குக் கிடைக்கிறது.

அடுத்து தேவியின் சந்நிதி. அம்மை அருள்பெற்று அகன்றால் அம்மையப்பனும் இடையே கந்தப்பெரு மானும் அமர்ந்திருக்கும் சோமாஸ்கந்த மூர்த்தியைத் தரிசித்துக் கொண்டு வலமாக வந்தால் நடுத் தூணில் இவ்வாலயத்தை நிறுவிய கர்த்தரான ஸ்ரீலஸ்ரீ சிதம்பர சுவாமிகளைத் தரிசித்து உட்செல்

கிறேம். அர்த்த மண்டபம் கரு அறையைக் காண லாம். கருவறையில் திருமுருகப் பெருமான் வள்ளி தேவசேனு சமேதராய் நின்ற திருக்கோலத்தில் காட்சி யளிக்கிறுர். சுவாமி சுயம்பு மூர்த்தி. சுயம்புவுக்கு முன்னுல் அபிடேக மூர்த்தி வள்ளி தேவ சேனு சமே தராய் சிலா வடிவில் காட்சியளிக்கிறுர். இவருக்குத் தான் அபிடேகங்களனைத்தும் நடைபெறும். மூலவர் சுயம்புவானதால் புனுகு சட்டம் சாற்றி வழிபடுவது வழக்கம். மூலவரைத் தரிசித்துக்கொண்டு உட்பிர காரம் வந்தால் பரிவார மூர்த்திகளின் தரிசனம் கிடைக்கும். உட்பிரகாரத்தில் காணக்கிடைத்தற்கரிய பல உற்சவ மூர்த்தி சிலைகள் உள்ளத்தை ஈர்க் கின்றன. அவற்றுள் தென்னுட்டில் எங்கும் காணக் கிடைக்காத உபதேச மூர்த்தி வடிவம் நம்நெஞ்சையும் கருத்தையும் கவர்ந்து நிற்கின்றது. இறைவன் அமர்ந்த நிலையில் இருக்கிறுர். அவர்தம் இடது துடையில் பதும பீடத்தின்மேல் சுவாமிநாதப் பெருமான் உபதேசம் செய்யத் தயாராக இருக்கிறுர். பரமசிவன் குருவினிடம் காட்டும் பவ்ய பாவ னையைத் தத்ரூபமாக வடித்திருக்கிறுர் சிற்பி. சிவ பெருமான் தன் இரு கரங்களையும் மார்போடு அணைத் துக்கொண்டு சிரம் சாய்த்துப் புருவ மத்தியில் கண் ணேக்கு வைத்து கருத்து ஒன்றி உபதேசம் பெறத் தயாராக இருக்கும் காட்சியில் சிலையை வடித்து அமைத்த சிற்பியைச் சைவத் தமிழுலகம் என்றும் மறவாது. கந்தனுடைய முகத்தில் சீடன்பால் காட்ட வேண்டிய பரிவும் அன்பும் தவழ்கின்றன.

அடுத்து முத்துக் குமாரசாமியைத் தரிசிக்கலாம். தன் வலக்காலை மாயூரத்தின் முதுகில் எடுத்து ஊன்றி மற்ருெரு திருப்பாதத்தைப் பீடத்தில் ஊன்றித் தூக்கிய திருக்கரத்தில் வேலாயுதத்தையும் தாங்கி அபய கரத் தையும் புன்முருவல் பூத்த முகத்தையும் கொண்டு, காட்சி தரும் நிலை தம் நெஞ்சை அள்ளிக் கொள்ளும். பிரகாரத்தோடு வலம் வந்தால் அடுத்து காட்சி

யளிப்பது சக்கரஸ்தாபன மூர்த்தி. சடாட்சர அட்ச ரங்கள் செதுக்கப் பெற்ற பீடத்தைத் தரிசிக்கலாம்.

ஆறுமுகமும் பன்னிரண்டு திருக்கரமும் கொண்டு மாயூர வாகனத்தில் வீற்றிருக்கும் சண்முகப் பெருமான் அடுத்து நம்மை அழைத்துக் காட்சிதருகிறார். இச்சா கிரியா சக்திகளுடன் ஞான சக்தியாகிய வேலைப் பிடித்துக் காட்சியளிக்கும் இப்பெருமானின் அழகே அழகு. வெளியில் வருவோம். இவ்வாலயத்தில் இரு தேவியருக்கும் தனித்தனி சந்நிதிகள் உண்டு. பிர காரத்தில் தென்பால் சர்வ வாத்தியங்களும் முழங்கத் தகுந்த மண்டபம் வேலைப் பாடமைந்த தூண்களை யுடையதாய் அமைக்கப் பெற்றுள்ளது. மண்டபத் துக்கு மேற்பால் உற்சவமூர்த்தி சந்நிதியும் காட்சி தரும். பெரியவர் இளையவர் என இரு உற்சவமூர்த் திகள் இங்கு தனித்தனியே இருபீடங்களில் காட்சி தரு கின்றனர். பெரியவர் நடுவிலும் இடப்பால் இளைய வரும் வலப்பால் இரு தேவியரும் எழுந்தருளியுள் ளனர். உற்சவமூர்த்தியின் ஒளிவீசும் திருமுகம் கண்டார் எவரையும் இமையா நாட்டம் கொள்ளச் செய்யும். பிரகாரத்தைச் சுற்றி வலம் வந்தால் வன் மீகநாதர் சுற்றாலயமும் காசிவிசுவநாதர் விசாலாட்சி யுடன் காட்சிதரும் சுற்றாலயமும் காணலாம். இறுதி யாகக் கால பயிரவரைத் தரிசித்துக்கொண்டு வெளி வருகிறோம். இத்தலத்தில் தரிசிக்க வேண்டிய தெய்வ நலஞ்சான்ற நல்லிடங்கள் பல உள. அவையாவன 1. வள்ளையார் ஓடை என்னும் புண்ணிய தீர்த்தம். 2: பிரணவ பர்வதம். 3. வேம்படி விநாயகர் ஆலயம். 4. கண்ணுவர் பேட்டை. 5. சிதம்பர சுவாமிகள் மடாலயம்.

வள்ளையார் ஓடை என்று அழைக்கப்படும் புண்ணிய தீர்த்தம் கோயிலின் தென்பால் உள்ளது. சரவணப்பொய்கை என்று அழைக்கப்படுகிறது. இது ஒரு அழகிய திருக்குளம். இதன் மத்தியில் ஓர் நீராழி

மண்டபம் உள்ளது. இதன் அடியில் ஊற்று ஓடிக் கொண்டே இருக்கும். இதுதான் இத்தலத்திற்குத் தீர்த்தம். 200 கெஜ நீளமும் 100 கெஜ அகலமும் நாற்புறமும் கற்கட்டிய படிக்கட்டும் மதிற்சுவர்களும் கொண்ட அழகியதாய் தூய நீர் உடையதாய்ப் பக்தர்களுக்குப் பயன்படுகிறது.

பிரணவபர்வதம் என்பது திருக்கோயிலுக்கு மேற்பால் அமைந்துள்ளது. ஏறத்தாழ 100 அடி உயரமும் 300 கெஜப் பரப்பும் கொண்டது. இதன் உச்சியில் கைலாசநாதப் பெருமான் பார்வதி சமேதராய் விநாயகப் பெருமானுடன் வீற்றிருந்து காட்சி நல்கும் திருக்கோயில் அமைந்துள்ளது. இம்மலைக்கு அடியிலிருந்து உச்சிவரை அழகிய படிக்கட்டுகளும் இருமருங்கும் மின் விளக்குகளும் அமைக்கப்பட்டுள்ளன. இம்மலைக்கும் திருக்கோயிலுக்கும் கண்ணுவப் பேட்டையில் சிதம்பர சுவாமிகள் ஆசிரமத்துக்கும் சுருங்கை வழி இருக்கிறது. பிரணவ வடிவத்தில் இது அமைந்துள்ளதால் இப்பெயர் பெற்றது. முருகப் பெருமான் பல அசுரர்களுடன் இங்கு யுத்தம் செய்து அவர்தம் ஆற்றலை அழித்து அருள் வெற்றி கண்ட இடமாதலால் யுத்தபர்வதம் என்றும் இம்மலை அழைக்கப்படுகிறது. இப்பர்வதத்துக்கு வடபால் கால்கல் தொலைவில் வேம்படி விநாயகர் திருக்கோயில் இருக்கிறது. நிம்ப விருட்சம் என்பது வேப்ப மரத்திற்கு உரிய மற்றொரு பெயர். நிம்பமர நிழலில் பிரணவ சொரூபியான விக்கினேச மூர்த்தி அமர்ந்திருக்கிறார். திமிரமலம் போக்கும் திவ்விய மூர்த்தி இவர். மகா இலக்குமி இங்கு நிம்ப விருட்சமாக நிற்கின்றார். இவ்விருட்சத்தின் மூலத்தில் விநாயகர் வீற்றிருக்கிறார். இது பற்றிய புராண வரலாறு அடுத்த பகுதியில் படித்தறியலாம்.

கண்ணுவ மகரிஷி ஆதியில் தவமியற்றி முருகப் பெருமான் கடைக்கண் நோக்கு பெற்று உய்ந்த

கண்ணுவர் பேட்டை வேம்படி விநாயகர் கோயிலுக்கு வடபால் 500 கெஜ தொலைவில் உள்ளது. கண்ணுவர் பேட்டையில்தான் ஸ்ரீலஸ்ரீ சிதம்பர சுவாமிகள் மடாலயம் இருக்கிறது. சமராபுரிவாழ் சண்முகத்தரசு எழுந்தருளியுள்ள இத்திருக்கோயிலை நிறுவிய அருள் வள்ளல் ஸ்ரீலஸ்ரீ சிதம்பர சுவாமி களாகும். இவர் உறைந்த இடமே பெரிய மடாலய மாகத் திகழ்கின்றது. இவர் முருகனுடைய அநுபூதி பெற்றுச் சிவலிங்க சொரூபியாய் இம்மாடலயத்தில் எழுந்தருளியுள்ளார். இன்றைக்குச் சுமார் 300 ஆண்டுகட்குமுன் அருளாட்சி நடாத்திய சுவாமிகள் ஸ்ரீ கந்தசாமிப் பெருமான் திருக்கோவிலின் ஆதி தர்ம கர்த்தராவர். அவர் வழி வழி வந்தவர்களே இத் திருக்கோயிலின் நிர்வாகத்தை ஏற்று நடாத்தி வரு கின்றனர். சுவாமிகள் இம் மடாலயத்தில் தங்கி பூசை புரிந்த இடம், தவமியற்றிய ஒடுக்க அறை, அடி யார்கட்கு அன்னம் பாலிக்கும் அகலிடம் ஆகியவை இம்மடத்தில் இடம் பெற்றுள்ளன. சுவாமிகள் ஒடுக்க அறையிலிருந்து திருக்கோயிலுக்கும் பிரணவ மலைக்கும் சுரங்கை வழியுண்டு. சுவாமிகளின் அருள் வரலாறு பின்னர் விரிக்கப்படும்.

## இவ்வாலயத்தில் நிகழும் பெரு விழாக்கள் :

### I. மகா கந்தர் சஷ்டி விழா :

இவ்விழா ஐப்பசி மாதத்தில் நடைபெறும். விழா ஆறு நாட்கள் கொண்டாடப்பெறும். சூரசம்மார விழா கண் கொள்ளாத காட்சி. சிங்கமகாசூரன் தாரகாசுரன் கயமுகாசுரன் அஜமுகி முதலானவர் கள் தலைகள் பல நிற வேலைப் பாட்டுடன் செய்து அவற்றை ஒவ்வொரு கூண்டுகளின் தலைப்பில் பொருத்திக் கூண்டினுள் ஆடத்தெரிந்த, ஆடிப் பழகிய ஆட்கள் புகுந்து கொண்டு தூக்கிக் கொண்டு ஆடும் காட்சியைப் பல ஊர்களிலிருந்தும் திரளான

மக்கள் வந்து கண்டு களிப்பர். ஆறுநாட்களிலும் அறிஞர்களைக் கொண்டு கந்த புராண விரிவுரை யாற்றுவது வழக்கம். சூரசம்மார மூர்த்தியை எழுந் தருளச் செய்து 16 கால் மண்டபத்தில் ஆயக்கால் நிறுத்தி ஆராதனை செய்யப்படும். அப்போது முருகனு டைய முகத்தில் மகிழ்ச்சி பொங்கக் காணலாம். சம்மாரம் முடிந்து திரும்புங்கால் மூர்த்தியைப் பார்த் தால் வேகம் தணியாத சினம் உமிழும் முகத்தைக் கண்டாலே நம்மை அறியாமலே ஓர் அச்சம் பிறக்கும். இது ஒரு அதிசயக் கோலம். ஒரே மூர்த்திதான் சம்மாரத்துக்கு முன் மகிழ்ச்சி தவழ்ந்த முகம் பின் சினம் கக்கும் செம்முகமாய் இருத்தலைக் காணலாம்.

**பிரம்மோற்சவம் :**

இவ்வுற்சவம் மாசி மாதம் 12 நாட்கள் நடைபெறும். இவ்விழாவில் சிறப்பான நாள் தெப்பல் உற்சவம் நடைபெறும் நாளாகும். மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட தெப்பலில் ஆறுமுகப் பெருமான் சரவணப் பொய்கையில் வலம் வரும் காட்சியைத் தடாகத்தின் நான்கு புறங்களிலும் மக்கள் திரண்டு நின்று பார்த்து மகிழ்வர்.

★

# புராண வரலாறு

நைமிசாரணியம் என்பது ஓர் வனம். அங்கு முனிவர் பெருமக்கள் பலர் தவமியற்றி வந்தனர். ஒரு நாள் அவர்கள் ஒன்று கூடினர். பிறவி நீக்கத்திற்கு வழியை ஆராய்ந்தனர். ஒரு முடிவுக்கும் வராது நிற்கையில் திருவருள் கூட்டுவிக்க சூதபுராணிகர் அவண் வந்து எய்தினர். அவரை முனிபுங்கர்கள் வரவேற்று உபசரித்தனர். தமக்கு ஏற்பட்ட ஐயத்தை அவர்பால் உரைத்தனர். அவர் கூறலுற்றார்: திருக் கயிலேயில் இறைவனைக் கண்டு தரிசிக்க அகத்தியர் சென்றார். பணிவன்போடு அஞ்சலி செலுத்தி நிற்கையில் இறைவன், "யாது வேண்டி வந்தனை" என்று வினவினர். அதற்கு அகத்தியர் "ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்னும் ஆறும் 'பகம்'என்னும் ஒலிக்குறிப்பால் உணர்த்தப்படுகின்றன. அதன் உண்மையைத் திருவாய்மலர்ந்தருள வேண்டும்" என்று விண்ணபபித்தார். இறைவன் "முனிவனே இயற்கையாகவே அதனை உணர்ந்துள்ள ஸ்ரீ சண்முகப் பெருமானையடைந்து கேட்டுக் கொள்ளக் கடவை" என்று பணித்தார். பணியைச் சிரமேற் கொண்டு அகத்தியர் சண்முக கிரிக்குச் சென்று சரவணப் பெருமானைக் கண்டு தரிசித்து வணங்கி வாய் பொத்தி நின்றார். அகத்தியர் கருத்துணர்ந்த ஆறுமுகப் பெருமான் "அகத்திய முனிவரே நிலவுலகில் நாம் மகிழ்ந்து உறையும் பதிகள் அறுபத்திநான்கு. அவற்றுள் ஆறு தலங்கள் நமக்கு உகந்தவை. அவற்றுள் ஒன்று சமராபுரியாகும். அத்தலம் நமக்கு மிகுந்த விருப்பத்தையளிக்கும் பதியாகும். அங்கு நாம் இடைவிடாமல் வசிக்கின்றோம். அங்கு தேவர்கள் பூசிக்கின்ற யுத்த பர்வதம் என்று ஒரு மலையுண்டு. அதன் கொடுமுடியில் நாம் பரார்த்தமாகப் பிரதிட்டை செய்த பரமசிவன் பார்வதி சமேதராய் வீற்றிருக்கிறார். அம் மலைக்குக் கிழக்கில் அன்பர்கட்கு வேண்டியவற்றை அருள்பாலித்துக் கொண்டு இரு தேவியருடன் நாம் நீங்காமல் எழுந்தருளியுள்ளோம். அத் தலத்தில் பிரணவப் பொருளை உபதேசித்தருள்வோம். நீ

அங்கு சென்று தியானித்துக் கொண்டிருந்தால் உன் விருப்பம் நிறைவேறும்'' என்று கூறினர். இவ் வரலாற்றைக் கேட்ட நைமிசாரணிய முனிவர்கள் சூத புராணிகரை நோக்கி, "பெருமானே அந்த யுத்த பர்வதத்தின் சிறப்பையும் சமராபுரியின் புனித வரலாற்றையும் எமக்கு எடுத்தியம்ப வேண்டுகிறோம்'' என்று கூறினர். சூத புராணிகர் கூறக் தொடங்கினார்:

**யுத்தகிரியின் வரலாறு :**

முன்பொருகால் வைகுந்தத்தில் விஷ்ணு தேவர் திருமகளுடன் உபேந்திரன் உடனிருக்க ஆழ்ந்து உரையாடிக் கொண்டிருந்தார். அதுகாலை கண்ணுவ முனிவர் அவண் வந்தார். அவரை இவர்கள் கவனிக்கவில்லை. சினங்கொண்ட கண்ணுவர், "நம்மை முகமன் உரையாதிருந்த நீங்கள் மூவரும் முறையே ஊமையாகவும் மானாகவும் வேடனாகவும் தோன்றித் திரியக் கடவீர்''என்று சபித்து அகன்றார். அதற்கேற்ப இந்த யுத்த கிரிக்கு அண்மையில் உள்ள வனத்தில் உபேந்திரன் வேடனாகத் தோன்றினான். விஷ்ணு தேவர் இம்மலைச் சாரலில் சிவமுனி என்ற பெயருடன் தவமியற்றினர். திருமகளும் ஒரு பெண் மானாகத் தோன்றினாள். துணையின்றித் தவித்த அப்பெண்மான் இம்மலைச் சாரலையடைந்தது. சிவமுனியைக் கண்டது. தன்னையறியாமலேயே அவர்பால் இச்சைகொண்டது. தெய்வ சங்கற்பத்தினால் முனிவரும் திருக்கண் சாற்ற அது கருவுற்றுப் பெண்மகவு ஒன்றை வள்ளிக் கிழங்கு அகழ்ந்த பொதும்பரில் ஈன்றது. அத் தருணத்தில் வேட்டைமேல் வந்த உபேந்திர வேடன் அக் குழந்தையைக் கண்டு எடுத்து உச்சிமோந்து தன் மனையாளிடம் கொடுத்தான். அவள் பால் அருத்தி வள்ளி என்ற திருநாமத்தைச் சூட்டினள். சாப விளைவு வந்து யெய்தியதால் அம்மான் யுத்தகிரியை வலம் வரத் தன் சுயவடிவம் பெற்றது. சுயவடிவம் பெற்ற திருமகள் மலையுச்சியில் எழுந்தருளிய மகேசுவரரையும்

பாலாம்பிகையும் பூசித்து வணங்கினள். திருமகள் வணங்கியதால் அம்மலேக்கு ஸ்ரீ பர்வதமென்று பெயர் வந்தது. பின்னர் திருமகள் வள்ளியம்மையின் ஆல யத்துக்கு வந்து தன் தலேவர் வருகைக்காகத் தவம் கிடந்தாள். சிவமுனி பலகாலம் தவம் இருந்தும் சாப விளேவு ஏற்படாததால் சிவனேக் குறித்துத் தவமியற்றி னர். சிவபெருமான் அவர்முன் தோன்றி' முனிவரே நீர் சமராபுரியடைந்து வள்ளேயார் ஓடையில் மூழ்கி சண்முகப் பெருமானேத் தரிசித்து அவரால் பிரதிட்டை செய்யப்பட்ட சிவலிங்கம் ஒன்று உண்டு. அதனேப் பூசிப்பீராக. அது கண்ணுவ முனிவராலும் பூசிக்கப் பட்டது. அம்முனிவர் அக்கிரியை நாடோறும் வலஞ் செய்துகொண்டு ஆசிரமத்திலிருக்கிருர்'' என்று திரு வாய் மலர்ந்தருளினுர். அதற்கிசைந்து சிவமுனிவர் சமராபுரி வந்தார். வள்ளேயார் ஓடையில் மூழ்கி விபூதி தரித்து உருத்திராக்கமணிந்துகொண்டு கண்ணுவராசிரமத்தைத் தரிசித்துக் கொண்டு யுத்த கிரியை வலம் வந்து உச்சிமேல் சென்று கைலாச நாதரைத் தரிசித்த மாத்திரத்தில் உள்ளம் தெளிவு பட்டது. அவர்முன் கைலாசநாதர் தோன்றி அன்பனே உனக்குச் சாப விளேவு ஏற்பட்டது. உனக் காகத் திருமகள் இம்மலேயின் அடியில் கீழ்பால் எழுந்தருளியுள்ள சண்முகப் பெருமான் ஆலயத்தில் வள்ளி நாயகியின் சந்நிதியில் தவமியற்றிக் கொண் டிருக்கிருள்,'' என்று கூறி ஸ்ரீ தேவியை வரவழைத்து அவளே நோக்கி "உன் பூசனேயினுல் உளம் மகிழ்ந் தோம். உன் கோரிக்கைப்படி உன் பதியைப் பெறு வாயாக'' என்று அனுக்கிரகம் செய்தார்.

**பிரணவமலேயின் வரலாறு.**

இந்த யுத்தகிரிக்கு மற்றொரு பெயர் பிரணவ மலே என்பது. இப்பெயர் பெற்றதற்குக் காரணம் பின் வருமாறு: வேதங்கள் கலிகாலத்தை அஞ்சி அருந் தவம் செய்து இறைவனேப் பிரார்த்தித்தன. அவற்

றின் வேண்டுகோளின்படி வரந்தர அவ்வேதங்கள் காஞ்சிபுரத்திற்குக் கிழக்கே கிழக்குச் சமுத்திரத்திற்கு மேற்பால் காதவழி தூரத்தில் உருத்திரகோடி என்ற பதியில் பர்வதமாகி நின்றன. அது வேதகிரி என்ற பெயர் பெற்றது. அவ்வாறு வேதங்கள் வரம் பெற்ற தையறிந்து வேதங்கட்கு ஆதியந்தமாயிருக்கின்ற பிரணவ புருடன் இறைவனையடைந்து "பெருமானே வேதங்களெல்லாம் பர்வதமாயின. அடியேனுக்கு இருக்குமிடம் யாது? என்று பிரார்த்தித்தான்."பிரண வமே தமது சரீரமாக உன்னை வகித்திருக்கின்ற நமது சண்முகப்பெருமானை நோக்கிப் பிரார்த்திக்க உன் விருப்பம் நிறைவேறும்" என்று இறைவன் மொழிந் தருளினர். இதற்கிணங்கப் பிரணவ புருடன் சமராபுரி யடைந்து சண்முகப் பெருமானைத் துதிக்க, அவ்வள வில் சுயம்புவாகிய விம்பத்தினின்றும் தோன்றித் தன்னை வணங்கிய பிரணவ புருடனை ஆசீர்வதித்து "மகாமந்திரயந்திரங்களினுல் உன்னுல் எப்படி நாம் சூழப்பட்டிருக்கிறேமோ அப்படி இந்த யுத்தபுரியில் நீ நமது பின் பக்கத்தில் சூழ்ந்து மலைவடிவமாகி இருக் கக் கடவாய்; பிரணவ சைலமென்று நீ அழைக்கப் பெறுவாய்" என்று அருள் பாலித்தார். அதுமுதல் இம்மலைக்குப் பிரணவமலை என்ற பெயர் வந்தது.

**வேம்படி விநாயகர் வரலாறு :**

முன்பொருகால் தேவர்கட்கும் அசுரர்கட்கும் போர் மூண்டது. தேவர்கள் தோற்றனர். வெற்றி கண்ட விம்மிதத்தால் அசுரர்கள் அல்லல் விளைவிக்கத் தொடங்கினர். அதைக்கண்ட திருமால் அவர்களை அடக்கத் தொடங்கினுர். பல அசுரர்கள் ஆற்ருது ஓடி ஒளிந்தனர். சிலர் ஓடினர். அவர்களைத் துரத்திச் சென்று திருமால் நசுக்கத் தொடங்கினுர். அவ்வாறு ஓடிவந்த அசுரர்கள் அங்கு நீராடி வருகின்ற பிருகு முனிவரின் பத்தினியைக் கண்டு சர ணடைந்தனர். கழிவிரக்கத்தால் அபயம் அளித்தார்

முனிவர் பத்தினி. திருமால் அவண் வந்து அவ் வசுரர்களை எதிர்த்தார். அதுகண்ட பிருகு பத்தினி திருமாலை நோக்கி, "நாம் இவர்க்கு அபயம் அளித் தோம் ஆதலால் அவர்களை எதிர்க்க வேண்டாம்" என்று வேண்ட, அதற்கு ஒருப்படாது திருமால் மீண்டும் எதிர்த்தார். "அபயம் அளித்த என்னை யன்றோ முதலில் சிதைக்க வேண்டும். அதுவல்ல வோ நியாயம்" என்று பத்தினி கண்டித்தார். சினங் கொண்ட திருமால் தன் சக்கராயுதத்தால் அவள் கழுத்தை அறுத்து எறிந்தார். மற்றைய இருடி பத்தினிகள் இதைக் கண்டு அலறிக்கொண்டு பிருகு முனிவரிடம் சென்று ஓலம் இட்டனர். ஒலி கேட்டு முனிவர் நிட்டை கலைந்து நடந்ததையுணர்ந்து கொண்டு திருமாலை நோக்கி, "உன் தாயக்குச் சம மான என் பத்தினியைச் சிதைத்தாய் ஆதலால் நீ பத்து பிறவிகள் எடுக்கக் கடவாய் என்று சாபம் கொடுத்தார். பின் திருமாலின் மார்பில் வீற்றிருக்கும் திருமகளை நோக்கி "உன் கணவன் மார்பகத்தில் வீற்றிருக்கும் இலக்குமியே இதை நீ பார்த்துக் கொண்டு மரம்போல் இருந்தாயல்லவா. நீ கசப்பை உமிழும் வேப்பமரமாகக் கடவாய் என்று சபித்துச் சினம் தணிந்து சிந்தித்தார். பின்னர் சுக்ராச்சாரி யாரை அழைத்து அவரைக்கொண்டு மிருத சஞ்சீவினி மந்திரத்தால் அற்ற கழுத்தைச் சேர்த்துத் தம் பத்தினியைப் பிழைக்கச் செய்து அவளுடன் தன் ஆசிரமம் சேர்ந்தார்.

சாபமேற்ற திருமகள் விநாயகப் பெருமானை வழிபட்டால் விக்கினம் அகலும் என்று கருதினள். கருதிய திருமகள் இச் சமராபுரி வந்து அடைந்தார். இங்கு பிரணவ மலைச் சாரலில் கண்ணுவ முனிவர் ஆசிரமத்துக்கு அண்மையில் திருக்கோயில் கொண் டருளிய விநாயகரைத் துதித்துக் கண்ணீர் விட்டுக் கலங்கி நின்றாள். அவள் குறையுணர்ந்த விநாயகப் பெருமான் "திருமகளே தவசிகளின் சாபத்துக்கு

விளைவு ஏற்படுவது கடினம். என்றாலும் அஞ்சாதே. நீ அந்த வேப்ப மரமாகவே (நிம்ப விருட்சம்) இவண் நிற்பாயாக. அதனடிக்கண் நாமும் நீங்காமல் வீற்றிருந்து அனைவருக்கும் அல்லல் போக்கி அருள் பாலிக்கின்றோம்" என்று கூறியருளினர். அவ்வாறே திருமகளும் வேப்ப மரமாக நின்றாள். அம்மரத்திற்கு அடியில் ஞான சொரூபியான விநாயகரும் வீற்றிருந்தார். இக் காட்சியைத் தேவர்களும் முனிவர்களும் கண்டு களித்தனர்.

யுத்த புரியாகிய திருப்போரின்கண் எத்தகையோருக்கும் அருள் பாலிக்கத் திருவுளங் கொண்ட கந்தசாமிப் பெருமான் பிரமன் இந்திரன் முதலான தேவர்களை இவண் வரும்படி அருளாணை யிட்டார். அதற்கிணங்க அனைவரும் சந்நிதியில் கூடி வேதாகம முறையால் கந்தசாமிப் பெருமானைப் பூசித்து வணங்கி நின்றனர். அப்பொழுது கந்தப் பெருமான் "ஆண்டு தோறும் உத்தராயன கும்பரவியில் பூர்வ பக்கத்தில் சகல ஆத்ம கோடிகளுக்கும் நம் அருள் நோக்குக் கிடைக்கும்படி விழாக் கொண்டாடுக! என்று அருளாணை பிறப்பித்தார். அதை ஏற்ற அனைவரும் உளம் மகிழ்ந்து பூரித்து ஆடிப்பாடித் திளைத்து வள்ளி தேவசேனா சமேத கந்தப் பெருமானுக்கு ஆண்டு தோறும் விழா எடுத்து மகிழ்ந்தனர். இன்றும் விழா எடுத்து மகிழ்கின்றனர். இத்தகைய சிறப்பு வாய்ந்த சமராபுரி (திருப்போரூர்) சண்முகப் பெருமானை உளங்கனிந்து உருகிப் பிரார்த்தித்து நாம் நம் அல்லல் தரும் இப்பிறவி நோயை யகற்றிப் பேரா இன்பப் பெரு வாழ்வு எய்துவோமாக.

**ஆறுமுகம்வாழி ஆறிரண்டு தோள் வாழி**
**தேறுபதம் வாழி இருதேவிமார்—வீறுபுடை**
**வாழி வேல்வாழி மயில்வாழி போரூரர்**
**வாழி சகம்வாழி மகிழ்ந்து.**

ஸ்ரீலஸ்ரீ சிதம்பர சுவாமிகள் அருளிச் செய்த

# திருப்போரூர் சந்நிதிமுறை

## நாள் வழிபாட்டுப் பாடல்கள்

---

அயிலேந்து தோளானை ஆறுமுகத்தானை
மயிலேந்து தாளானை வாழ்த்திப்—புயலேந்து
தண்டலையார் போரூர்ச் சரவணனை நெஞ்சமே
கண்டு அலையாது உற்ருர்களி.

வேல்கண்டேன் தோளில் வியன்சதங்கை
மொய்த்திருந்த
கால்கண்டேன் ஆறுமுகங் கண்டேனே—நீல்கொண்ட
மாயூரங் கண்டேன் வளமைதரு போரூரில்
போயூரங் கண்டேன் புகுந்து.

நாயேனுன் சீரடிக்கு நன்கல்ல செய்தாலும்
பேயேன் இழைத்த பெரும்பிழையை—நீயே
பொறுத்தாள்வ துன்கடனும் போரூரா என்னை
ஒறுத்தால் எனக்கார் உறவு.

இல்லறத்தான் அல்லேன் இயற்கைத் துறவியல்லேன்
நல்லறத்து ஞானியல்லேன் நாயினேன்
—சொல்லறத்தின்
ஒன்றேனும் இல்லேன் உயர்ந்ததிருப் போரூரா
என்றேநான் ஈடேறு வேன்.

ஏதுபிழை செய்தாலும் ஏழையே னுக்கிரங்கித்
தீது புரியாத தெய்வமே—நீதி
தழைக்கின்ற போரூர்த் தனிமுதலே நாயேன்
பிழைக்கின்ற ஆறுநீ பேசு.

களங்கமெலாம் அற்றேன் கதிபுகுந்தேன் நாயேன்
உளங்குளிர ஆனந்தம் உண்டேன் —வளங்களெல்லாம்
உற்றேன் திருப்போரூர் உத்தமனார் சீர்பாத
நற்றா மரைதொழுத நான்.

சோமகிரணப் பெருங் கருணை
சுரந்த முகங்கள் ஓராறும்
சுருதி வழுத்தும் பன்னிரண்டு
தோளும் நீபத் தொடைமார்பும்

காமர் நிறச் செம்பட்டாடைக்
காட்சி மருங்குல் சிறுசதங்கை
கலித்த உபயத் திருத்தாளும்
கடையேன் துதிக்கப் பணிப்பாயே

சேம நிதியே சுரர்பதியே
தெய்வத் தருவே மலர்மருவே
செறி பூரணமே ஆரணமே
சிறியேன் உயிருக்கு ஓர்உயிரே

பூமன் அறியாப் பிரணவத்தின்
பொருளைப் பகரும் பூங்கிளியே
போற்றும் அடியார்க்கு ஓரருளே
போரூர் முருகப் பெருமாளே.